Union Systems & Infotech
SPECIAL OFFER
4 CAMERAS PACKAGE
₹14,000/- ONLY
CONTACT NOW 98942 59223

RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com

THILLAI MAIL
தில்லை மெயில்

செய்திக்கு:94426 34795
மலர் : 6 இதழ் : 104
VOLUME: 6 ISSUE: 104
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (25-9-2026) வெள்ளிக்கிழமை
PUDUCHERRY (25-9-2026) FRIDAY

புதுவையின் புகழ் பெற்ற ஸ்தாபனம்
கௌதம் ஜீ வல்லரி
ஹோல்சேல் கடை
916 HALLMARK SHOWROOM

# காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்ட ஆய்வுப் படிப்பு மாணவர் சேர்க்கை நிகழ்ச்சி

## அனுமதி கடிதத்தை அமைச்சர் நமச்சிவாயம் வழங்கினார்



புதுச்சேரி, செப்.25–

புதுச்சேரி, இலாஸ்பேட்டையில் உள்ள காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்ட ஆய்வுப் படிப்பு மாணவர் சேர்க்கை நிகழ்ச்சி நேற்று (24.09.2026) நடைபெற்றது.

இதுவரை இங்கு புதுவை பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன் முனைவர் பட்ட வகுப்புகள் நடைபெற்று வந்தன. பல்கலைக்கழகம் இந்த ஆண்டு முதல் இந்நிறுவனமே ஆராய்ச்சி மாணவர்களை நுழைவுத் தேர்வு நடத்தித் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் பல்வேறு துறைகளில் முனைவர் பட்டம் படிப்பதற்குரிய மாணவர்களுக்கு உரிய நுழைவுத் தேர்வை நடத்தி, தேர்ச்சி முடிவை வெளியிட்டது. இந்தத் தேர்வினை எழுதுவதற்கு 96 மாணவர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர். இதில் 13 மாணவர்கள் தேசியத் தகுதித் தேர்வு எழுதி வெற்றிபெற்றவர்கள் என்பதால் தேர்வு எழுதுவதிலிருந்து அவர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டது.

தமிழ், ஆங்கிலம், கணினி அறிவியல், மனையியல், தாவரவியல், வணிகவியல், புள்ளியியல், சுற்றுலாவியல், பொருளாதார துறைகளை சார்ந்த 75 மாணவர்கள் மட்டும் நுழைவுத் தேர்வு எழுதினர். தேர்வு எழுதிய மாணவர்களிலிருந்து இந்த ஆண்டு 38 மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வு செய்யத் தேர்வாகி உள்ளனர்.

இம்மாணவர்களுக்கு உரிய சேர்க்கை அனுமதி நேற்று (24.9.26) கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உயர்கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் வழங்கி பேசுகையில்:

அரசு உயர்கல்விக்கு அளித்துவரும் முக்கியத்துவத்தையும், வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும். போட்டி நிறைந்த இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் தங்களைத் தக்க வைத்துக்கொள்ள திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பின்னர் அமைச்சர் நமச்சிவாயம் கல்லூரி வளாகத்தில் மரக்கன்று நடுதல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை மாணவர்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தல், புதியதாகக் கட்டப்பட்டுவரும் கல்லூரிக் கட்டடங்களைப் பார்வையிடல், நிறுவனத்தில் அமைந்துள்ள மீன் பண்ணையைப் பார்வையிடல், மகளிருக்கான புதுப்பிக்கப்பட்ட கழிப்பறைகளைத் திறந்துவைத்தல், நிறுவனத்தின் செய்தி மடலினை வெளியிடுதல், ஒரு மரம் – ஒரு உறுதிமொழியேற்றல் முதலிய பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

நிறுவன இயக்குநர் முனைவர் சசிகாந்த தாஸ் வரவேற்புரை வழங்கினார். ஆராய்ச்சிப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் மேரி ஜோசபின் அருணா நன்றியுரை வழங்கினார். மனையியல் துறைத்தலைவர் அலமேலு மங்கை நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்வில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

லாஸ்பேட்டை காஞ்சி மாமுனிவர் அரசு ஆராய்ச்சி நிறுவனத்தில்

# முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புக்கு மாணவர் சேர்க்கை

**அமைச்சர் நமச்சிவாயம் தொடங்கி வைத்தார்**



^ புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் அரசு முதுகலை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்டப் படிப்புக்கான மாணவர் சேர்க்கையை கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி

புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர்பட்ட ஆய்வுப்படிப்புமாணவர் சேர்க்கை நடைபெற்றது.

புதுச்சேரி லாஸ்பேட்டை காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இதுவரை புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன் முனைவர் பட்ட வகுப்புகள் நடைபெற்று வந்தன.

புதுச்சேரி பல்கலைக்கழகம் இந்த ஆண்டு முதல் காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனமே ஆராய்ச்சி மாணவர்களை நுழைவுத் தேர்வு நடத்தி தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று அனுமதி வழங்கி உள்ளது.

அதன் அடிப்படையில் அண்மையில் பல்வேறு துறைகளில் முனைவர் பட்டம் படிக்க மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டது. இந்தத் தேர்வினை எழுத 96 மாணவர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இதில் 13 மாணவர்கள் தேசியத் தகுதித் தேர்வு (நெட்) எழுதி வெற்றி பெற்றவர்கள் என்பதால் தேர்வு எழுதுவதிலிருந்து அவர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டது. தமிழ், ஆங்கிலம், கணினி அறிவியல், மனையியல், தாவரவியல், வணிகவியல், புள்ளியியல், சுற்றுலாவியல், பொருளாதார துறைகளைச் சார்ந்த 75 மாணவர்கள் மட்டும் நுழைவுத் தேர்வு எழுதினர்.

தேர்வு எழுதிய மாணவர்களிலிருந்து இந்த ஆண்டு 38 மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வு செய்ய தேர்வாகி உள்ளனர். முனைவர் பட்ட ஆய்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 38 ஆய்வு மாணவர்களுக்கு உரிய சேர்க்கை அனுமதியை வழங்கும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் நிறுவன இயக்குநர் சசிகாந்த தாஸ் வரவேற்புரை வழங்கினார்.

புதுச்சேரி உள்துறை மற்றும் கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சேர்க்கை அனுமதியை வழங்கி, அரசு உயர்கல்விக்கு அளித்துவரும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும். போட்டி நிறைந்த உலகத்தில் ஒவ்வொருவரும் தங்களை தக்க வைத்துக்கொள்ள திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

தொடர்ந்து அமைச்சர் கல்லூரி வளாகத்தில் மரக்கன்று நட்டார். சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை மாணவர்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தார். புதிதாக கட்டப்பட்டு வரும் கல்லூரி கட்டிடங்களைப் பார்வையிட்டார். அங்குள் மீன் பண்ணையையும் பார்வையிட்டார்.

மகளிருக்கான புதுப்பிக்கப்பட்ட கழிப்பறைகளை திறந்து வைத்தார். நிறுவனத்தின் செய்தி மடலினை வெளியிடுதல், ஒரு மரம் – ஒரு உறுதிமொழியேற்றல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

மனையியல் துறைத்தலைவர் அலமேலு மங்கை நிகழ்வை தொகுத்து வழங்கினார். இந்த நிகழ்வில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆராய்ச்சிப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் மேரி ஜோசபின் அருணா நன்றி கூறினார்.

Indhu Tamizh | 25/09/2026 | page. No :- 3

# பேராசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் நமச்சிவாயம் பேச்சு



புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடந்த விழாவில் பி.எச்டி. படிப்புக்கு தேர்வான மாணவர்களுக்கு சேர்க்கைக்கான அனுமதி கடிதத்தை கல்வி அமைச்சர் நமச்சிவாயம் வழங்கினார்.

புதுச்சேரி, செப். 25: புதுச்சேரி லாஸ்பேட்டையில் உள்ள காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இதுவரை புதுவை பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன் முனைவர் பட்ட வகுப்புகள் (பி.எச்டி) நடைபெற்று வந்தன. புதுவை பல்கலைக்கழகம், இந்த ஆண்டு முதல் காஞ்சி மாமுனிவர் நிறுவனமே பி.எச்டி. மாணவர்களை நுழைவுத்தேர்வு நடத்தி தேர்ந்தெடுத்து கொள்ளலாம் என்று அனுமதி வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் பல்வேறு துறைகளில் பி.எச்டி. படிப்புக்கு நுழைவுத்தேர்வை இந்த நிறுவனம் நடத்தி, தேர்ச்சி முடிவை வெளியிட்டது. தேர்வு எழுதிய மாணவர்களிலிருந்து இந்த ஆண்டு 38 மாணவர்கள் பி.எச்டி. படிப்புக்கு தேர்வாகி உள்ளனர்.

இந்நிலையில் பி.எச்டி. படிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 38 ஆய்வு மாணவர்களுக்கு சேர்க்கை அனுமதி வழங்கும் நிகழ்ச்சி நேற்று பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் நடந்தது. நிறுவன இயக்குநர் சசிகாந்த தாஸ் வரவேற்றார். இதில் கல்வி அமைச்சர் நமச்சிவாயம் கலந்து கொண்டு முனைவர் பட்டப்படிப்பிற்கான சேர்க்கை அனுமதி கடிதங்களை மாணவர்களுக்கு வழங்கினார். மேலும், நிறுவனத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு வசதி மற்றும் புதுப்பிக்கப்பட்ட மகளிர் கழிவறையையும் திறந்து வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது: சமுதாயத்திற்கு நம்மால் ஆன உதவிகளை செய்ய வேண்டும். முனைவர் பட்டப்படிப்புக்கு தேர்வாகியுள்ள மாணவர்களின் ஆராய்ச்சி சமுதாயத்திற்கு பயனுள்ள வகையில் இருக்க வேண்டும். பிரதமர் மோடி 2047க்குள் வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு செயல்பட்டு வருகிறார். அந்த லட்சியத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற லட்சியத்தை நோக்கி செயல்பட வேண்டும்.

மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்கி கொடுக்க வேண்டும் என்பதற்காக, முதல்வர் அதிக நிதியை கல்வித்துறைக்கு ஒதுக்கி கொடுத்துள்ளார். அதனால், அனைத்து கல்லூரிகளிலும் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். இருப்பினும், பேராசிரியர்களின் பதவி உயர்வு உள்ளிட்ட ஒரு சில பிரச்னைகள் காலம் காலமாக இருக்கின்றன. அவற்றையும் சரி செய்வதற்கு அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. இதற்கான கோப்புகளை கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஆய்வு செய்துள்ளேன். அந்த கோப்புக்கு அனுமதியை பெற அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளை சேர்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். ஒருங்கிணைப்பாளர் மேரி ஜோசபின் அருணா நன்றி கூறினார். மனையியல் துறைத்தலைவர் அலமேலு மங்கை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

Dinakaran | 25|09|2026 | Page.no'.6